


**10. 03. 2026**

## தலைப்புச் செய்திகள்

1. மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லாவிற்கு எதிராக எதிர்கட்சியினர் கொண்டு வந்த நம்பிக்கையில்லா தீர்மானம் மக்களவையில் இன்று விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

2. இயற்கை எரிவாயு இருப்பையும், விநியோகத்தையும் முறைப்படுத்தும் வகையில் இதனை அத்தியாவசிய பொருட்கள் சட்டத்தின் கீழ் மத்திய அரசு கொண்டுவந்துள்ளது.

3. வணிக எரிவாயு தட்டுப்பாட்டால் பாதிக்கப்பட்டுள்ள உணவகங்களுக்கு தேவையான மாற்று ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டுமென்று முதலமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின் பிரதமருக்கு கடிதம் எழுதியுள்ளார்.

4. அரியலூர் மாவட்டத்தில் 14 கிராமங்களுக்கான துணைமின் நிலைய பணிகளால் 13 ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடியிருப்புகள் பயனடையும் என்று மாநில மின்துறை அமைச்சர் திரு. சிவசங்கர் கூறியுள்ளார்.

5. சுவிஸ் ஓப்பன் பேட்மிண்டன் போட்டிகள் இன்று தொடங்குகின்றன.

## இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖❖❖

## மக்களவை

மக்களவைத் தலைவர் திரு. ஓம்பிர்லாவிற்கு எதிராக எதிர்கட்சியினர் கொண்டுவந்த நம்பிக்கையில்லா தீர்மானம் மக்களவையில் இன்று விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

காங்கிரஸ் உறுப்பினர் திரு. முகமது ஜாவத் இந்த தீர்மானத்தை முன்மொழிந்து பேசுகையில், எதிர்கட்சி தலைவர் பேச அனுமதி மறுத்ததோடு, எதிர்கட்சி பெண் உறுப்பினர்கள் மீது குற்றச்சாட்டுகளை திரு.ஓம்பிர்லா சுமத்தியதாக குறைகூறினார்.

காங்கிரஸ் உறுப்பினர் திரு. கவுரவ் கோகோய் பேசுகையில், குடியரசு தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது எதிர்கட்சி தலைவர் பேசுகையில், அவைத்தலைவர் தொடர்ந்து இடையூறு ஏற்படுத்தியதாக குறிப்பிட்டார்.

அவையின் கண்ணியத்தை காக்கும் வகையிலேயயே இந்த தீர்மானம் கொண்டுவரப்பட்டதாக அவர் கூறினார்.

இதனிடையே அவை நடத்தும் அலுவலர் திரு. ஜெகதாம்பிகா பால், இந்த விவாதத்திற்கு 10 மணி நேரம் ஒதுக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

❖❖❖❖❖❖❖❖❖

## மாநிலங்களவை

மாநிலங்களவையிலிருந்து எதிர்கட்சி உறுப்பினர்கள் இன்று வெளிநடப்பு செய்தனர்.

அவை இன்று கூடிய உடன் மத்திய அமைச்சர்கள் பல்வேறு அமைச்சகங்கள் மற்றும் துறைகள் சார்ந்த அறிக்கைகளை சமர்பித்தனர்.

நாடாளுமன்ற குழுக்களின் அறிக்கைகளும் அவையில் தாக்கல் செய்யப்பட்டன.

பூஜ்ஜிய நேரத்தில் திரிணமுல் காங்கிரஸ் உறுப்பினர் திரு. டெரிக் ஓ பிரைன் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர

திருத்தப்பணிகள் குறித்து விவாதிக்க வேண்டுமென்று கோரினார்.

தேர்தல் சீர்த்திருத்தங்கள் குறித்து விவாதிக்க வேண்டுமென்று எதிர்கட்சித் தலைவர் திரு. மலலிகார்ஜுன கார்கேயும் வலியுறுத்தினார்.

இதனால் நிலவிய கூச்சல் குழப்பங்களின் மத்தியில் எதிர் கட்சி உறுப்பினர்கள் மாநிலங்களவையிலிருந்து வெளிநடப்பு செய்தனர்.

எதிர் கட்சியினரின் கோரிக்கைகளுக்கு பதிலளித்த அவை முன்னவர் திரு. ஜே. பி. நட்டா எதிர் கட்சிகள் விவாதத்தை அவையினுள்ளே விரும்பவில்லை என்று தெரிவதாக குறிப்பிட்டார்.

தேர்தல் சீர்த்திருத்தங்கள் நடைமுறைப் படுத்தப்பட்ட பின்னர் இப்பிரச்சனையை எதிர்கட்சிகள் எழுப்புவதற்கு அவர் கண்டனம் தெரிவித்தார்.

❖❖❖❖❖❖❖❖❖

<u>ஷிவ்ராஜ் சிங்</u>

நாட்டின் உணவு தானிய உற்பத்தி கடந்த 10 ஆண்டுகளில் 44 சதவிகிதம் அளவிற்கு அதிகரித்து உள்ளதாக மத்திய வேளாண் அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌஹான் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் இன்று துணை கேள்விகளுக்கு பதிலளித்த அமைச்சர், நாடு 357 மில்லியன் டன் உணவு தானியத்தை உற்பத்தி செய்து புதிய சாதனை படைத்துள்ளதாக கூறினார்.

வேளாண் சீர்த்திருத்தங்களாலும், விவசாய கொள்கைகளாலும் இந்த சாதனை எட்டப்பட்டதாக எடுத்துரைத்தார்.

சீனாவை பின்தள்ளி உலகத்தின் பெரிய நெல் உற்பத்தி இந்தியா முன்னேறியுள்ளதாக குறிப்பிட்டார்.

பருப்பு உற்பத்தியும் 19 மில்லியன் டன்னிலிருந்து 26 மில்லியன் டன்னாக உயர்ந்துள்ளது என்று கூறினார்

பிரதமரின் தன்தானிய திட்டமும், 100 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு, சீரான வளர்ச்சி உறுதி செய்யப்படுவதாக கூறினார்.

விவசாயிகள் பயன்பெறும் வகையில் ஒரு லட்சத்து 86 கோடி ரூபாய் மதிப்பிலான உர மானியங்களை மத்திய அரசு வழங்கியிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖❖❖❖

<u>அவசர சட்ட பிரகடனம்</u>

இயற்கை எரிவாயு இருப்பையும், விநியோகத்தையும் முறைப்படுத்தும் வகையில் இதனை அத்தியாவசிய பொருட்கள் சட்டம் 1955-ன் கீழ் மத்திய அரசு கொண்டுவந்துள்ளது.

இதன்படி குழாய் மூலமான உள்நாட்டு இயற்கை எரிவாயு விநியோகம், போக்குவரத்திற்கான அழுத்தமூட்டப்பட்ட எரிபொருள், சமையல் எரிவாயு உற்பத்தி உள்ளிட்ட பிரிவுகளுக்கு முன்னுரிமை அளித்து பெட்ரோலியம், இயற்கை எரிவாயு அமைச்சம் அறிவிக்கை வெளியிட்டுள்ளது.

கடந்த 6 மாத கால எரிவாயு பயன்பாட்டிற்கு ஏற்ப அந்தந்த பிரிவுகளின் விநியோகத்திற்கு இது வகை செய்கிறது.

மத்திய கிழக்கு மற்றும் மேற்காசிய நாடுகளில் நிலவும் போர் பதற்றம் காரணமாக பொட்ரோலிய பொருட்களுக்கு நெருக்கடி ஏற்படக்கூடும் என்பதை கருத்தில் கொண்டு இந்நடவடிக்கை.

பெட்ரோலிய பொருட்களின் உற்பத்தியை அதிகரிக்கவும், எண்ணெய் நிறுவனங்களுக்கு மத்திய அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖

பிரதமர் வருகை

பிரதமர் திரு. நரேந்திரமோடி நாளை ஒருநாள் பயணமாக திருச்சி வருகிறார்.

திருச்சி பஞ்சப்பூரில் நாளை மாலை 5 ஆயிரத்து 650 கோடி ரூபாய் மதிப்பிலான முடிவடைந்த திட்டப்பணிகளை தொடங்கி வைப்பதுடன் புதிய திட்டங்களுக்கு பிரதமர் அடிக்கல் நாட்டுகிறார்.

தொடர்ந்து திருச்சியில் தேசிய ஜனநாயக கூட்டணி பொதுக்கூட்டத்திலும் பிரதமர் உரையாற்றுகிறார்.

பிரதமரின் வருகையை ஒட்டி திருச்சி முழுவதும் பலத்த பாதுகாப்பு வளையத்திற்குள் கொண்டுவரப் பட்டுள்ளதோடு, போக்குவரத்திலும் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

❖❖❖❖❖❖❖❖

எழுச்சி தினம்

தேசத்தின் கட்டமைப்பை பாதுகாத்து வலுப்படுத்துவதில் மத்திய தொழில் பாதுகாப்பு படையினர் இன்றியமையா பங்காற்றுவதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

மத்திய தொழில் பாதுகாப்பு படையினரின் 57-வது எழுச்சி தினத்தை ஒட்டி அப்படை பிரிவினருக்கு வாழ்த்துக்களை தெரிவித்த பிரதமர், அவர்தம் அளப்பரிய சேவையும், அர்ப்பணிப்பு மிகுந்த பணிகளும் நாட்டை முன்னேற்றப்பாதையில் கொண்டு செல்வதாக குறிப்பிட்டார்.

குடியரசு துணைத்தலைவர் திரு. சி. பி. ராதா கிருஷ்ண்ணன் தமது செய்தியில் மத்திய பாதுகாப்பு படையினரின் தொழில் நேர்த்தியும், அர்ப்பணிப்பும் தன்னிகரற்றது என்று கூறியுள்ளார்.

இப்படைவீரர்களின் துணிச்சல், ஒழுக்கம் கடமை உணர்விற்கு நாடு தலைவணங்குவதாக கூறியுள்ளார்.

மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷதாவும் இப்படை வீரர்களுக்கு வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார்.

❖❖❖❖❖❖❖❖

முதலமைச்சர் கடிதம்

வணிக எரிவாயு தட்டுப்பாட்டால் பாதிக்கப்பட்டுள்ள உணவகங்களுக்கு தேவையான மாற்று ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும் என்று முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் மத்திய அரசை வலியுறுத்தியுள்ளார்.

பிரதமர் திரு.நரேந்திரமோடிக்கு முதலமைச்சர் எழுதியுள்ள கடிதத்தில், எரிவாயு தட்டுப்பாட்டால் மக்கள்; வணிக நிறுவனங்கள், குறு சிறு நடுத்தர தொழில் நிறுவனங்களும் பாதிக்கப்படாமல் இருப்பதை மத்திய அரசு உறுதி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

முன்னதாக சென்னை தலைமை செயலகத்தில் சமையல் எரிவாயு சிலிண்டர் தட்டுப்பாடு தொடர்பாக தலைமை செயலாளர், உணவு நுகர்வோர் பாதுகாப்புத்துறை உள்ளிட்ட உயர் அதிகாரிகளுடன் முதலமைச்சர் இன்று அவசர ஆலோசனை மேற்கொண்டார்.

இதனிடையே சமையல் தட்டுப்பாடு குறித்து தமிழகம் முழுவதும் உள்ள ஹோட்டல் உரிமையாளர்களுடன் உணவுத்துறை அமைச்சர் திரு. சக்கரபாணி தலைமையில் சென்னை தலைமை செயலகத்தில் நாளை ஆலோசனை கூட்டம் நடைபெறுகிறது.

❖❖❖❖❖❖❖❖

முதலமைச்சர்

தமிழ்நாட்டில் பல்துறை சார்பில் 156 கோடியே 51 லட்ச ரூபாய் மதிப்பிலான பல்வேறு முடிவுற்ற பணிகளை சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து காணொலி வாயிலாக முதலமைச்சர் இன்று திறந்து வைத்துள்ளார்.

ஊரக வளர்ச்சி துறை சார்பில் ராமநாதபுரம், நாமக்கல் மாவட்டங்களில் அலுவலக, பொது, சுகாதாரம், பள்ளி கட்டடங்கள், சமுதாய கூடங்கள் உள்ளிட்டவை இதில் அடங்கும்.

வீட்டுவசதி நகர்ப்புற வளர்ச்சித்துறையின் கீழ் மதுரை சுப்ரமணியபுரத்தில் 396 புதிய அடுக்குமாடி குடியிருப்புகளையும் திறந்து வைத்தார்.

பதிவுத்துறை சார்பில் கோவை, தர்மபுரி உள்ளிட்ட மாவட்டங்களில், 7 சார்பதிவாளர் அலுவலக கட்டடங்களையும் முதலமைச்சர் திறந்து வைத்துள்ளார்.

❖❖❖❖❖❖❖❖

<u>சிவசங்கர்</u>

தமிழகத்தில் மகளிர் உரிமைத் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் மக்களின் நலனை முன்னிறுத்தியே செயல்படுத்தப் படுவதாக மாநில மின்துறை அமைச்சர் திரு. சிவசங்கர் கூறியுள்ளார்.

அரியலூர் மாவட்டம், குமிழியம், இரும்பிலிக் குறிச்சி, உஞ்சினி, மருதூர் உள்ளிட்ட 14 கிராமங்களுக்கு ஐந்தரை லட்சம் ரூபாய் மதிப்பில் 33 கிலோ வாட் துணை மின் நிலையங்கள் அமைக்கும் பணிகளை அவர் இன்று துவக்கி வைத்தார்.

இந்த திட்டம் செயல்பாட்டிற்கு வரும்போது 13 ஆயிரத்து 554 குடியிருப்புகள் பயன்பெறும் என்று கூறினார்.

❖❖❖❖❖❖❖❖

<u>K.K.S.S.R.</u>

தமிழ்நாட்டில் கடந்த 5 ஆண்டுகளில் மாநில அரசு எண்ணற்ற மக்கள் நலத்திட்டங்களை செயல்படுத்தி உள்ளதாக மாநில வருவாய்த்துறை அமைச்சர் திரு. K.K.S.S.R. ராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

விருதுநகர் மாவட்டம் ராஜபாளையத்தில் 30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள புதிய இணைப்பு சாலையை இன்று திறந்து வைத்து பேசிய அவர், இதன் மூலம் போக்குவரத்து நெரிசல் வெகுவாக குறையும் என்றார்.

❖❖❖❖❖❖❖❖

மதுரை வாய்ஸ்

மதுரை மாவட்டத்தில் இதுவரை 107 ஏக்கர் பரப்பளவில் பயிர்களுக்கு காப்பீடு செய்யப்பட்டு உள்ளதாக வேளாண் துணை இயக்குநர் பிரபா தெரிவித்துள்ளார்.

மாவட்டத்தின் நெல் சேமிப்பு நிலையங்களிலும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டதாக எமது செய்தியளர் தெரிவித்துள்ளார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖❖

தேர்தல் பணி

சட்டப்பேரவை தேர்தல் பணிக்காக உத்திரபிரதேசம் உள்ளிட்ட மாநிலங்களை சேர்ந்த 5 கம்பெனி துணை ராணுவ படை வீரர்கள் மற்றும் மத்திய ரிசர்வ் காவல்படையை சேர்ந்த 600 பேர் சென்னை பெரம்பூர் வந்துள்ளனர்.

ஆவடி தாம்பரம் பகுதிகளில் 5 கம்பெனி படைவீரர்கள் பணியாற்றுவார்கள்.

நெல்லை மாநகராட்சியில் தேர்தல் பணிகளின் ஒருபகுதியாக சட்டீஸ்கட் மாநில எல்லை பாதுகாப்பு படையினர், காவல் துறையினருடன் இணைந்து வாகன சோதனை மேற்கொண்டனர்.

பாளையங்கோட்டை, மேலப்பாளையம், கே.டி.சி. நகர் உள்ளிட்ட பகுதிகளில் சோதனைகள் நடைபெற்றன.

ராணிப்பேட்டை மாவட்டத்தில் தேர்தலை முன்னிட்டு காவல் துறையினர் மற்றும் மத்திய பாதுகாப்பு படை வீரர்களின் விழிப்புணர்வு பேரணி இன்று நடைபெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்

.. வாய்ஸ் ..

இதேபோல் வேலூரில் துணை ராணுவப் படையினர் மற்றும் காவல் துறையினர் அணிவகுப்பில் ஈடுபட்டனர்.

❖❖❖❖❖❖❖❖❖

## <u>பேட்மிடன்</u>

சுவிஸ் ஓப்பன் பேட்மிட்டன் போட்டிகள் பேசலில் இன்று தொடங்குகின்றன.

ஆடவர் இரட்டையர் பிரிவில் ஹரிஹரண் அர்ஜுன் இணையும்,

மகளிர் இரட்டையர் பிரிவில் ட்ரீஸா ஜாலி காயத்ரி கோபிசந்த் இணையும்,

சீன தாய் இணைகளுடன் இன்று மோதுகின்றன.

❖❖❖❖❖❖❖❖

## <u>கிரிக்கெட்</u>

ஐ.சி.சி. 20-20 கிரிக்கெட் உலககோப்பையை வென்ற இந்திய ஆடவர் அணிக்கு 131 கோடி ரூபாய் பரிசுத் தொகையை இந்திய கிரிக்கெட் வாரியம் அறிவித்துள்ளது.

இந்த அணியின் 15 வீரர்கள், பயிற்சியாளர்கள், இதர பிரிவினருக்கு இது பகிர்ந்தளிக்கப்படும் என்று இவ்வாரியம் தெரிவித்துள்ளது.

❖❖❖❖❖❖❖❖